# ஆர்வத்தினை வெளிப்படுத்துவதற்கான அழைப்பு

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

# இலங்கையில் அதிநவீனத்துவம் வாய்ந்த நிதியியல் சந்தை உட்கட்டமைப்பினை நிறுவுவதற்கும் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை இயலுமைப்படுத்துவதற்குமான ஆலோசனைப் பணிகளின் ஏற்பாடு

## அறிமுகம்

1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் கீழ் 1950இல் நிறுவப்பட்ட இலங்கை மத்திய வங்கி இலங்கையின் நிதியியல் முறைமையில் உச்ச நிறுவனமாக விளங்குகின்றது. இலங்கை மத்திய வங்கியிடம் நிதியியல் சந்தைகள், சாதனங்கள், நிறுவனங்கள் மற்றும் உட்கட்டமைப்பு என்பனவற்றினை உள்ளடக்குகின்ற வினைத்திறன்மிக்க நிதியியல் முறைமையினைப் பேணுகின்ற பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. மேலும், மத்திய வங்கி நிதியியல் முறைமையின் சுமுகமான தொழிற்பாட்டிற்காகப் பொருத்தமான சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பொன்றினைப் பேணுமாறு தேவைப்படுத்தப்பட்டிருக்கிறது.

## செயற்றிட்டம்

நிதியியல் முறைமை உட்கட்டமைப்பினைத் தரமுயர்த்துவதில் தற்பொழுது இடம்பெற்று வருகின்ற அதன் முயற்சியின் ஒரு பகுதியாக, இலங்கை மத்திய வங்கி, இலத்திரனியல் வர்த்தகப்படுத்தலுக்கும் உள்நாட்டு நிதியியல் சந்தையில் நேரடியான கொடுக்கல்வாங்கல் செயன்முறைகளுக்கு வசதியளிப்பதற்காகவும் அதிநவீனத்துவம் வாய்ந்த இலத்திரனியல் வர்த்தகப்படுத்தல் தளத்தினையும் மத்திய இணைத்தரப்பு கொடுத்துத்தீர்த்தல் மற்றும் தீர்ப்பனவு முறைமையினையும் மத்திய பிணையங்கள் வைப்பக முறைமையொன்றினையும் நிறுவுவதற்குத் திட்டமிட்டிருக்கிறது.

## குறிக்கோள்

செயற்றிட்டமானது பன்முகத்தன்மை கொண்ட குறிக்கோள்களைக் கொண்டிருப்பதுடன், இது, நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காக சரியான முறையில் முகாமைப்படுத்தப்படும் தீர்ப்பனவு மற்றும் இணைத்தரப்பு இடர்நே-ர்வுகள் மற்றும் பெருமளவு முதலீட்டாளர் பாதுகாப்பு என்பனவற்றினூடாக வினைத்திறன்மிக்க விலை கண்டறிதல்களுக்கும் அதிகரிக்கப்பட்ட வினைத்திறனுக்கும் வசதியளிக்கும் விதத்தில் உள்நாட்டு நிதியியல் சந்தையின் நடவடிக்கைகளை ஆழப்படுத்தி அகலமாக்குவதனை உள்ளடக்கியிருக்கிறது.

## தகைமைப் பிரமாணம்

இலத்திரனியல் வர்த்தகத் தளம், மத்திய இணைத்தரப்பு கொடுத்துத் தீர்த்தல் மற்றும் தீர்ப்பனவு முறைமை மற்றும் அரச பிணையங்கள் அல்லது அதனையொத்த படுகடன் சாதனங்கள் உட்பட நிதியியல் சந்தைச் சாதனங்களுக்கான மத்திய பிணையங்கள் வைப்பகம் ஆகியவற்றுக்கான அதிநவீன தகவல் தொழில்நுட்பத் தீர்வுகள் போன்றவற்றுக்கான ஆலோசனைகளைத் தனியாகவோ, கூட்டாகவோ வழங்கிய நிறுவனம் அல்லது கூட்டமைப்பு அல்லது கூட்டு முயற்சி நிறுவனம் (விலைக்குறிப்பீட்டாளர்) ஆர்வ வெளிப்படுத்தல்களை அனுப்பி வைக்கலாம்.

ஆர்வ வெளிப்படுத்துநர் (விலைக்குறிப்பீட்டாளர்), இலத்திரனியல் வர்த்தகத் தளம், மத்திய பிணையங்கள் வைப்பகம் மற்றும் மத்திய இணைத்தரப்பு கொடுத்துத் தீர்த்தல் மற்றும் தீர்ப்பனவு முறைமை ஆகிய ஒவ்வொரு முறைமைக்கும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பொருத்தமான மற்றும் ஒப்பிடத்தக்க தொழிற்பாட்டு நிலையிலுள்ள மேற்கோள் தளம்/ தளங்களினைக் கொண்டிருத்தல் வேண்டும். மேலும், விலைக்குறிப்பீட்டாளர், அத்தகைய மேற்கோள் தளங்களில் ஈடுபட்டிருக்கும் அதன் மூத்த ஆலோசகர்களை, உத்தேசச் செயற்றிட்டம் வெற்றிகரமாகப் பூர்த்தியாகும் வரை அதில் தீவிரமாக ஈடுபடுவதற்குத் தயாராக இருத்தல் வேண்டும்.

## ஆர்வத்தினை வெளிப்படுத்தலினைச் சமர்ப்பிப்பதற்கான நடைமுறை

"ஆர்வத்தினை வெளிப்படுத்துவதற்கான கோரிக்கை" இல் தெளிவுபடுத்தப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை இலங்கை மத்திய வங்கியின் இணையத்தளமான **https://www.cbsl.gov.lk** இலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

உத்தேச பணி மீதான மேலும் தகவல்களை மின்னஞ்சல் முகவரியான **project.cmd@cbsl.lk** இற்கு கோரிக்கையொன்றினை அனுப்பி வைப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும். விசாரணைகளுக்கான பதிலிறுப்புக்கள் இலங்கை மத்திய வங்கியின் இணையத்தளத்தில் வெளியிடப்படும்.

ஆர்வத்தினை வெளிப்படுத்தல்களை பின்வரும் முகவரியில் **இலங்கை நேரம் பி.ப. 3.00 மணி, 2018 யூலை 06 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ** ஒப்படைத்தல் வேண்டும்.

**தலைவர் - அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கொள்வனவுக் குழு**
**மே/பா பொதுப்படுகடன் கண்காணிப்பாளர், பொதுப்படுகடன் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி**
**இல. 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, 00100, இலங்கை**